[1993 அக்டோபர் 26]

போவதை ஒழுங்காகக் கொடுப்பதற்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்பதற்காக இதை மிகவும் கவனமாக, தவறு இல்லாமல் செய்வதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்கிறது. எங்கெங்கே எப்பொழுது தவறு நடந்தாலும் எல்லோருமே சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, தனிப்பட்டவர்களானாலும் சரி, பட்டாதாரர்களாக இருந்தாலும் சரி, நிலம் இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, அதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனுக்குடன் சரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 4, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

4—

இடையன்குடிகாட்டு நியாயவிலை கடையைப் பிரித்து சேந்தன்மங்கலத்தில் மற்றொன்றை ஏற்படுத்துதல்

*16749— திரு. ஆர். தங்கராஜ் :

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, இடையன்குடிகாட்டில் இயங்கும் நியாயவிலை கடையைப் பிரித்து சேந்தன்மங்கலத்தில் மற்றொன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) எனவே அடுத்த வினா எழவில்லை.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தாலுகா, இடையன்குடிகாட்டு கிராமத்தில் இருக்கின்ற நியாய விலைக் கடைக்குச் சென்று சேந்தமங்கலம், சிலுப்பனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3,000 மக்களுக்கு மேல் இருக்கின்ற அந்த கிராம மக்கள் தங்களுடைய அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இடையன்குடிகாட்டிலிருந்து சேந்தன்மங்கலம், சிலுப்பனூர் ஆகிய கிராமங்கள் 5 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற

சூழ்நிலையில் அந்தப் பக்கத்தில் சரியான சாலை வசதி இல்லை. எனவே, அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் தங்களுடைய அத்தியாவசியப் பொருள்களை வாங்கவேண்டுமென்றால், அவர்கள் அவர்களுடைய ஒரு நாளைய வேலையைக் கெடுத்துக் கொண்டுதான், அவர்களுடைய அத்தியாவசியப் பொருள்களை வாங்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். எனவே, இவர்களுடைய அவசியத்தை உணர்ந்து சுமார் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கின்ற அந்தப் பகுதியில் அவசியம் ஒரு நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிற இடையன்குடிகாடு என்ற கிராமப் பகுதியில், தளவாய்கடலூர் என்கிற கிராமத்தின் பெயராலே ஒரு நியாய விலைக் கடை அங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப் போன்று, மக்கள் தொகை எவ்வளவு என்று இங்கே தெரியவில்லை. ஆனால், அங்கே இருக்கிற குடும்ப அட்டைகள் மூன்று கிராமங்களுக்கும் சேர்ந்து 507 இருக்கின்றன. அதிலே, இடையன்குடிகாடு 180 ; சிலுப்பனூர் 200 ; சேந்தன்மங்கலம் 127. சுமார் 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று அரசு தீர்மானித்து இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சுமார் 21,985 நியாயவிலைக்கடைகள் இருக்கின்றன. இவை தவிர பகுதி நேரக் கடைகளாக 903 இருக்கின்றன. இவை தவிர நடமாடும் கடைகள் என்று 11 இருக்கின்றன. ஆனால், 500 குடும்பக் கார்டுகளுக்கும் குறைவாக, நியாய விலைக் கடைகளை நடத்துவதே அரசுக்கு மிகுந்த நெருக்கடியையும், பொருளாதாரச் சுமையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற, இடையன்குடிகாடு, கடையிலேயிருந்து சமீபத்தில்—22-7-1993 இல் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் சிலுப்பனூர் கிராமத்திற்காக 200 குடும்ப அட்டைகளைக் கொண்ட அந்தக் கிராமத்திற்குப் பகுதிநேரக் கடையை அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இவர்கள் சொல்லுகின்ற சேந்தன்மங்கலம் என்கிற அந்தக் கிராமத்தில் 127 கார்டுகள் தான் இருக்கிறது. ஆகவே, 127 கார்டுகளுக்கு ஒரு தனிக்கடை ஏற்படுத்துவது என்பது இயலாது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொலை தூரத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்டிருக்கிற இந்தக் குறிப்பில் 3 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 3 கிலோ மீட்டர்

1993 அக்டோபர் 26]

தூரத்திற்குள்ளே கடைகள் இருக்கலாம் என்பது விதி. ஆகவே தான், மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்விக்கு ''இல்லை' என்று பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தன்மங்கலம் கிராமத்தில் சரியான சாலை வசதி இல்லை. அந்த ஒரு நிலைமையைக் கணத்திற்கொண்டு அரசு சேந்தன்மங்கலம் கிராமத்தில் ஒரு பகுதி நேரக் கடையையாவது அமைப்பதற்கு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பகுதிநேரக் கடை என்பதற்கும் அங்கே இருக்கிற பொதுமக்கள் இலவசமாக அந்தக் கடையை நடத்துவதற்கு இடம் வழங்க வேண்டும். அதற்குப் பிறகு இந்தக் குறிப்பிட்ட கடையிலேயிருந்துதான் பகுதிநேரக் கடைக்கு 3 நாட்கள் அந்த அலுவலர்கள் அங்கே சென்று வழங்க வேண்டும். அதற்குத் தனியாகச் சம்பளம் தர இயலாது என்பது அரசு நிர்ணயித்திருக்கிற விதி. ஆகவே இந்தச் சூழ்நிலையில், 127 அட்டைகளுக்குப் பகுதி நேரக் கடையை அங்கே தொடங்க வேண்டுமானால் இந்த அடிப்படை வசதிகள் வேண்டும். இவை தவிர, இப்படிப் பிரித்துவிட்டால் இடையன்குடிகாட்டிலே 180 அட்டைகளுக்குத்தான் கடை இருக்கும். 180 அட்டைகளுக்காக ஒரு கடை நடத்த இயலாது. ஆகவே, அடிப்படைக் கடையையே நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவேதான், இந்தப் பகுதிநேரக் கடை திறக்க இயலாது என்று இப்பொழுது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், நடக்க முடியவில்லை, சாலை மோசமாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசில் சாலைகள் மிக்க நன்றாகப் போடப்பட்டு வருகின்றன என்பது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீங்கள், மக்கள் சென்று வாங்குவதற்குச் சாலைகள் வசதி இல்லை என்று சொன்னால், பகுதிநேரக் கடை நடத்துவதற்கு அங்கேயிருந்து வாகனங்கள்தான் வந்தாக வேண்டும். அதிலே எப்படி வாகனம் வரும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் சொல்லவேண்டும். ஆகவே எந்தவகையிலே பார்த்தாலும், 127 அட்டைகளுக்காக ஒரு பகுதிநேரக் கடை திறப்பது என்பது இயலாத காரியம். எதிர்காலத்திலே வேண்டுமானால் அதை பரிசிலிக்கக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5. திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.